[20th July 1957

SRI K. ANBAZHAGAN : மாவட்டங்களின் தலைநகரங்கள் அந்தந்த மாவட்டத்திற்கு உள்ளாகவேதான் இருக்கவேண்டும். வெளியில் இருக்கக் கூடாது. மாவட்டத் தலைமைக் காரியாலயங்கள் அந்தந்த மாவட்டத்திலே நிறுவப்பட வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்தாரால் வலியுறுத்தப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: எல்லாப் பிரச்னைகளும் கவனிக் கப்படுமென்று நான் முன்பே சொன்னேன். அந்த சப்-கமிட்டியிலே இருப்ப வர்களும் இங்கிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் சொல்லியதையும் அவர் கள் கவனித்திருப்பார்கள்.

Unemployment among the educated

* 171 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have taken any statistics in regard to the educated unemployed in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : No survey has been undertaken by the Government in regard to educated unemployed in the State. The figures available with the District Employment Offices show that the number of educated unemployed who registered their names in District Employment Offices in the State for the period from 1st October 1956 to 31st March 1957 is 19,811.

SRI S. PAKKIRISAMI PILLAI : படித்தவர்களின் எண்ணிக்கை வருஷா வருஷம் அதிகப்பட்டுகொண்டிருப்பதாலும், அவர்களுக்குப் போது மான அளவு வேலையில்லாத நிலைமை நீடித்துக் கொண்டு போகும்படியான சூழ்நிலை இருப்பதன் காரணத்தாலும் அப்போ ஏற்பட்ட படித்த வாலிபர்கள் மிகவும் கேவலமான நிலையில் போகாமல் இருப்பதற்காக, அவர்களுக்கு வேலையில்லாத அலவன்ஸ் கொடுப்பதற்கு ஏதாவது யோசனை அரசாங்கத் தாரிடம் இருக்கிறதா? அப்படியில்லையானால், அதைப்பற்றி ஆலோசனை செய்வதற்கு திட்டம் வகுக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : வேலையில்லாத் திண்டாட்ட நிவாரணம் அளிப்பது (அன்எம்ப்ளாய்மென்ட் இன்ஷூரன்ஸ்) என்பது மிகவும் அதிகச் செலவு ஆகக்கூடியது. அதை ஏற்றுக்கொண்டு நடத்த சர்க் காரால் இப்போது இயலாது. ஆகையால், கனம் அங்கத்தினர் படித்த வேலையில்லாதவர்களுக்கு மாத்திரம் இந்த மாதிரி இன்ஷூரன்ஸ் திட்டம் வகுக்க வேண்டுமென்று சொன்னால், அதை ஒரு "டிஸ்கிரிமினேஷன்" என்று கருதி, அரசாங்கம் அதை ஏற்க மறுக்கிறது.

Khadi centres

* 172 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of centres organized by the Government for the production and sale of Khadi in each district with their location;

(b) the staff employed in the depots for production and sale; and

(c) the total value of the sales during 1956–57?